முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் காரி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

29.11.2018, வியாழக்கிழமை

1. **தருமத் தலைவனே கந்தவேலா**
**தருமராஜனே ஆறுமுக அரங்கா**
**கருமம் போக்கி கலியுகம் காக்கும்**
**கருணா மூர்த்தியே ஞானதேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி தேள் திங்கள்**
**அறிவிக்க முன்னான்கோர் திகதி குரு வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 13ம் நாள் 29.11.2018, வியாழக்கிழமை)**
3. **வாரமதில் காரி நாயனாரும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
வாராந்திர தரிசனமாக அரங்கன்
வாழும் பிரணவக்குடிலை அணுகி
4. அணுகி அருளமுது உண்டு
அன்னமிட பொருளுதவி செய்து
அணுகி அரங்கனிடம் தீட்சை
அடைந்து தொடர் வழிபாடு காண
5. காணவே மக்களுக்கு ஆற்றல்
கண்ணியமான வாழ்வும் வளமும்
ஞானமும் அழியாமை திடமும்
ஞாலமதில் அடைந்து சிறப்பர்
6. சிறப்புதரும் உயர் கொள்கையென
செந்தில்வேலன் வழிபாடு தன்னை
மறுப்பின்றி ஏற்று வரும் மக்கள்
மறுமை வெல்வர் மரணமும் வெல்வர்
7. வெல்வரே கலி மாயைகளை
வெல்வரே மும்மலக் குற்றங்களை
ஆள்வரே மனக்கட்டுப்பாட்டை
ஆசாபாச பந்தங்களை போக்கி
8. போக்கி அரங்கன் துணை கண்ட
புண்ணியவான்கள் எல்லோரும்
ஆக்கமுடன் அழியாமை பெறுவர்
ஆறுமுகன் அருளும் பெறுவர்
9. பெருமைபட எல்லா தேசமும்
பேராசான் கொள்கை பரவிவர
வறுமை கஷ்டங்கள் இல்லா
வன்கொடுமை துன்பங்களில்லா

10. துன்பமில்லா இயற்கை பலமும்
தேவைக்கேற்ற பொருள் வளமும்
இன்பமான ஞான பலமும்
இறை அருளும் கூடி சிறப்பர்
11. சிறப்பு தரும் ஞானயுகமும்
செப்பிடுவேன் அரங்கன் தருமத்தால்
மறுப்பின்றி சடுதி அமையும்
மொழிந்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் காரி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமங்களைச் செய்து உலகின் தர்மசக்தியை பெருக்கி உலகைக் காக்கின்ற தர்மத்தின் தலைவனே முருகப்பெருமானே தர்மத்தின் அரசனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே முருகப்பெருமானின் அவதாரமே உலகின் தர்மபலத்தினை பெருக்கி மக்களின் கருமவினைகளை போக்கி இந்த துன்பம்மிக்க கலியுகத்தினை காக்கின்ற கலியுகமூர்த்தியே ஞானதேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 13ம் நாள் 29.11.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே காரி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் காரி நாயனார்.

வாரந்தோறும் வாரம் ஒருமுறையேனும் மக்கள் ஆறுமுக அரங்கன் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகி ஆங்கே ஞானிகளின் அருளாசியினால் சமைக்கப்படுகின்ற குடில் உணவை உண்டு ஆங்கே அன்னதானம் செய்கின்ற தர்மசெயலுக்கு அவரவரால் இயன்ற அளவு பொருளுதவிகள் செய்து ஆறுமுக அரங்கனிடத்து பயபக்தியுடன் பணிந்து தீட்சை உபதேசம் பெற்று அரங்கனின் உபதேசப்படி நடந்து தொடர்ந்து ஞானிகளை தவறாமல் பூஜைகள் செய்து வழிபட்டு வந்தால், மக்களுக்கு ஆற்றல் பெருகும் கண்ணியமான வாழ்வும் வளமும் பெருகிடும். ஞானமும் அழிவிலா நிலையாகிய மரணமிலாப் பெருவாழ்வை அடையும் வழியும் தெரிந்து அரங்கனின் கருணையால் பெருவாழ்வை அடையும் மனோதிடத்தையும் பெறுவார்கள்.

சர்வ சிறப்புமிக்க உயர் கொள்கையான முருகப்பெருமானின் வழிபாடுகளை மறுப்பின்றி ஏற்று முருகப்பெருமானே முழுமுதல் தெய்வம் என ஏற்றுக் கொண்டு வழிபாடுகளை செய்து வருகின்ற மக்களெல்லாம் பிறவித் துன்பத்தினை வெல்வார்கள், மறுபிறப்பை வெல்வார்கள், மரணத்தையும் வெல்வார்கள். அவர்களெல்லாம் கொடுந்துன்பமான கலியுகத்தின் மாமாயைகளை வெல்வார்கள். முருகப்பெருமானின் அருளால் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கனின் துணையால் மும்மலக் குற்றங்களை வெல்வார்கள். மனத்தினை அடக்கும் முறையை கைவரப் பெற்று மனக்கட்டுப்பாட்டை உண்டாக்கி ஆசாபாசங்களை போக்கி பந்தபாசங்களை போக்கி அரங்கனின் அகலா துணையுடன் புண்ணியவான்களாக ஆகி ஆக்கமும் ஊக்கமும் பெற்று அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வையும் அடைந்து முருகப்பெருமானின் அருளையும் பெற்று சிறப்படைவார்கள்.

பெருமைமிக்க ஆறுமுக அரங்கனின் தூயநெறிக் கொள்கைகள் உலகமெங்கும் எல்லா தேசங்களிலும் பரவி வர, அரங்கனின் கொள்கைகளை பின்பற்றுகின்ற புனிதமான அத்தேசங்களில் உள்ள வறுமை நிலைகள் மாறி கஷ்டங்கள் இல்லாத நாடாக வன்கொடுமைகள் இல்லாத நாடாக மாறுவதோடு துன்பம் அளிக்காத இயற்கை பாதுகாப்பும் இயற்கை வளமும் பெருகி தேவைக்கேற்ற பொருளாதார வளமும் பெருகி இன்பம் அளிக்கும் ஞானபலமும் பெருகி இறையருளும் கூடி சிறப்பான அமைதியான இன்பமயமான வாழ்வினை மக்கள் வாழ்ந்து சிறப்படைவார்கள்.

சர்வ சிறப்புகளையும் தந்தருளும் ஞானஆட்சி நடக்கும் ஞானயுகமானது உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் செய்யும் தன்னலமற்ற தவசக்தி மிகுந்த தருமங்களினால் மட்டுமே விரைந்து இவ்வுலகினில் அமையும் என்பது ஞானிகள் வாக்காகும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் ஞானயுகம் அமைய மக்கள் நல்வாழ்வு வாழ அறிவுறுத்துகிறார் மகான் காரி நாயனார்.

–சுபம்–